## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# வலுவாதார அபிவிருத்திச் சபை

# வெற்றிடம்

2017இன் 19ஆம் இலக்க இலங்கை வலுவாதார அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்திச் சபையின் பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளான பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வலுவாதார அபிவிருத்தி அதிகாரி - தரம் III (06 வெற்றிடங்கள்)**

**சேவை வகுதி: இணை அதிகாரி (MA – 03)**

| **தேவையான தகுதிகள்:** | **சம்பளம்:** |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், இயற்கை விஞ்ஞானம், சமூகவியல், பொருளியல் அல்லது முகாமைத்துவப் பாடங்களில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br><br>**ஏனையவை:**<br>• 22 முதல் 45 வயதிற்கிடைப்பட்டவராக இருக்க வேண்டும்.<br>• இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.<br>• சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.<br>• சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.<br>• ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும். | MA - 53,940 - 10X800 - 11X1190 - 10X1320 - 5X1350 - 94,980 மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.<br><br>(நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம்) |

**பதவிக்கு ஒப்படைக்கப்படும் பிரதான கடமைகள்:**

- வலுவாதார அபிவிருத்திக்காக வளங்கள் மற்றும் நிதி வசதிகள் வழங்குதலை ஒருங்கிணைத்தல்
- தொடர்பாடல் மற்றும் ஆலோசனை ஒருங்கிணைப்பு, தரவு கண்காணிப்பு மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
- சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்களில் உள்ள வேலைகளுக்கு ஒத்துழைக்கும் விசாரணை / தகவல் மற்றும் தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு, அறிக்கை வழங்குதல் மற்றும் கண்காணித்தல்.

விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

முழுமையான சுய தரவுத் தகவல்கள், தமது கல்வி தொடர்பான, தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் / விபரங்கள் மற்றும் தம்மைப் பற்றிய தகவல்களை விசாரிக்கக் கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் பின்வரும் முகரிக்கு பதிவுத் தபால் மூலம் 2026-06-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச்செய்ய வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வலுவாதார அபிவிருத்தி அதிகாரி 2026'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

அரசு / அரசு சார்ந்த / நியாயாதிக்க நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இல. 35, 02ஆம் மாடி,**
**லேக் ஹவுஸ் கட்டிடம்,**
**டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**இணையதளம்: www.sdc.gov.lk**
**தொலைபேசி: 0112885241**

**''வலுவாதார அபிவிருத்திப் பயணத்தில் பெருமைமிகு உறுப்பினராகுங்கள்''**